# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 100

வகுப்பு - எட்டு

நேரம்: 2.30 மணி

---

I. அ) **சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________________

   அ) வைப்பு    ஆ) கடல்    இ) பரவை

2. பறவைகள் ________________ பறந்து செல்கின்றன.

   அ) நிலத்தில்    ஆ) விசும்பில்    இ) மரத்தில்

3. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ________________

   அ) மார்பு    ஆ) கழுத்து    இ) தலை

4. செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ____________

   அ) கடல்    ஆ) ஓடை    இ) குளம்

5. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ________________ மதிக்கின்றனர்.

   அ) தாயாக    ஆ) தந்தையாக    இ) தெய்வமாக

6. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. -இத்தொடரில் உள்ள வினை முற்று ___________

   அ) மாடு    ஆ) மேய்ந்தது    இ) வயல்

7. பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள் ________________

   அ) ஒழுக்கமற்றவர்    ஆ) கல்லாதவர்    இ) வலிமையற்றவர்

8. காந்தியடிகள் ________________ போற்ற வாழ்ந்தார்.

   அ) வையம்    ஆ) நிலம்    இ) வானம்

9. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு ________________ பயன்படுத்தினர்.

   அ) தாவரங்களை    ஆ) உலோகங்களை    இ) மருந்துகளை

10. குறிப்பு வினையெச்சம் ________________ வெளிப்படையாகக் காட்டாது.

    அ) வினையை    ஆ) காலத்தை    இ) பெயரை

**ஆ) பொருத்துக.** 4 × 1 = 4

11. அ) நடந்து - முற்றெச்சம்
ஆ) பேசிய - குறிப்புப் பெயரெச்சம்
இ) எடுத்தனன் உண்டான் - பெயரெச்சம்
ஈ) பெரிய - வினையெச்சம்

**இ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** 2 × 1 = 2

12. அ) இருதிணை ஆ) நீளுழைப்பு

**ஈ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** 2 × 1 = 2

13. அ) பருத்தி + எல்லாம் ஆ) இடம் + எங்கும்

**II. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி.** 5 × 2 = 10

14. சரியான மரபுச் சொல்லை எழுதுக.

அ) பூ _______________ (பொய் / பறி)

ஆ) ஆ _______________ (நிரை / மந்தை)

15. சொற்களை ஒழுங்குப்படுத்தி முறையான தொடராக்குக.

அ) உலகம் தமிழ்மொழி வாழட்டும்
உள்ள வரையிலும்

ஆ) வென்றதை பரணி பகைவரை ஆகும்
பாடும் இலக்கியம்

16. கலைச் சொல் தருக.

அ) Plain ஆ) Leopard

17. தமிழ் எண்களை எழுதுக.

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10

18. உவமையால் விளக்கப்படும் பொருளை அறிக.

அ) எலியும் பூனையும் போல

i) நட்பு ii) பகை

ஆ) இலவு காத்த கிளி போல

i) ஏமாற்றம் ii) இணைதல்

19. சொல் பொருள் தருக. அ) சேகரம் ஆ) பிணி

20. தொடர்களை மாற்றுக.

அ) காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக.)

**VI. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.** 6 × 2 = 12

21. தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?

22. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?

23. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

24. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

25. சான்றோர்க்கு அழகாவது எது?

26. நோயின் மூன்று வகைகள் யாவை?

27. நம்மை நோய் அணுகாமல் காப்பவை யாவை?

28. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 3 = 15

29. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

30. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

31. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

32. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

33. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

34. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

35. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

**VIII. எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 × 6 = 12

36. எழுத்துக்களின் தோற்றம் குறித்து எழுதுக.

37. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

38. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

IX. **மனப்பாடப் பகுதி.** 2 + 4 = 6

39. ‘வாழ்க’ – எனத் தொடங்கும் ‘தமிழ் மொழி’ வாழ்த்துப் பாடலை எழுதுக.

40. ‘தன் குற்றம்’ – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

X. **அ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

41. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

42. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

43. வினைமுற்று என்றால் என்ன?

44. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

45. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

46. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

**ஆ) அகரவரிசைப்படுத்தி எழுதுக.** 1 × 2 = 2

47. எழுத்து, ஒலி வடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம், ஈசன், ஐயம்

**இ) பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.** 3

48. பூ, கல், புல், சொல், ஈ, பசு, பல், பா

| க்கள் | ற்கள் |
|---|---|
| | |
| | |
| | |

**ஈ) வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.** 3

49. சென்றனர், பேசினாள், நடக்கிறது

**உ) கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.** 4

50. (நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்த, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்து, பார்த்து)

XI. **கடிதம்.** 1 × 5 = 5

51. சுற்றுலாச் செல்ல ஒப்புதலும், பணமும் கேட்டுத் தந்தைக்கு மடல் வரைக.